# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**<u>முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்</u>**

**<u>மேல்முறையீட்டு மனு எண். 57 /2016</u>**

திரு. A. ஹபீப் ரஹமான்,
எம். அப்துல் கலாம் ஆஜாத் அவர்களின் பவர் ஏஜெண்ட்,
எண்.90, இரயில்வே ரோடு,
ஆடுதுறை. . . . . . . மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, வல்லம் ரோடு,
தஞ்சாவூர் – 625 007. . . . . .. எதிர்மனுதாரர்

**<u>ஆணை நாள் : 8–10–2016</u>**

1. திரு. எம். அப்துல் கலாம் ஆஜாத் அவர்களின் பவர் ஏஜெண்ட் திரு. A. ஹபீப் ரஹ்மான், ஆடுதுறை அவர்களின் 14.2.2016 நாளிட்ட தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திறகு சமர்ப்பிக்கப்பட்ட மனுவிற்கு மன்றத்திலிருந்து பதில் எதுவும் பெறப்படவில்லை என்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக அவரின் நாளிடப்படாத மனுவை சமர்ப்பித்துள்ளார். தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு அவர் சமர்ப்பித்த மனுவிற்கு 50 நாட்கள் ஆகியும் மன்றத்திடமிருந்து பதில் எதுவும் பெறப்படவில்லை என்பதால் அந்த மனு மேல்முறையீட்டு மனு எண்.57/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல், மேற்பார்வை பொறியாளர்/தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்திற்கு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 4.8.2016 நாளிட்ட அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

3. மேலும் இருதரப்பினரும் தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 18.10.2016 அன்று நடைபெறும் என்று 15.9.2016 நாளிட்ட அறிவிப்பின் மூலம் இருதரப்பினருக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

4. மேல்முறையீட்டாளர் தன்னுடைய 28.9.2016 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளருக்கு எழுதிய கடிதத்தில், தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 9.8.2016 நாளில் நடந்த விசாரணையில் கலந்து கொண்டதாகவும் அவரின் முகாந்திரத்தை தெரிவித்ததின்பேரில் சில நிவாரணங்கள் குறைதீர்க்கும் மன்றத்தின் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தின் மாவட்ட மின்நுகர்வோர் குறைதீர்மன்றத்தின் ஆணையின் நகலையும் சமர்ப்பித்துள்ளார். மேலும் மேற்கண்ட காரணத்தினால் அவருடைய மேல்முறையீட்டின் மனு மீது நடவடிக்கை எதுவும் தற்சமயம் தேவையில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேற்கண்ட கடிதத்தின் உண்மை நகல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மனுதாரர்*
*அ. ஹபீப் ரஹ்மான்,*
*எம். அப்துல் கலாம் ஆஜாத் அவர்களின் பவர் ஏஜெண்ட்,*
*90, இரயில்வே ரோடு,*
*ஆடுதுறை – 612 101.*

*பெறுநர்*
*உயர்திரு .ஆர். தர்மராஜ் அவர்கள்,*
*மின்குறைதீர்ப்பாளர்,*
*19–பு, ருக்மணி லெட்சுமிபதி சாலை,*
*(மார்ஷல் ரோடு), எக்மோர், சென்னை–600008.*

*ஐயா,*

*தங்களின் கடித எண்.த.நா.மி.கு மனு எண்.57/2016 அ/எண்.1183/2016, நாள்15.9.2016 கிடைக்கப்பெற்றேன். நான், சென்ற 9/8/2016ல் தஞ்சாவூர் மின்குறை தீர்ப்பாளரின் மன்ற*

*நடவடிக்கையில் ஆஜாராகியபோது, என்னுடைய முகாந்திரத்தை தெரிவித்ததின்பேரில் தஞ்சாவூர் மின்குறைதீர்ப்பாளர் அவர்கள் என்னுடைய முகாந்திரத்தின் பேரில் சில நிவாரணங்கள் குறைதீர்மன்ற தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் நகல் இத்துடன் இணைத்துள்ளேன். ஆதலால் என்னுடைய மேல்முறையீட்டு மனு மீது நடவடிக்கை எதுவும் தற்சமயம் தேவையில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*தங்கள் உண்மையுள்ள*
*ஒப்பம்/XX XXXXXX*

*நகல்*
*1) தலைவர் அவர்கள் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தஞ்சாவூர்,*
*2) செயற்பொறியாளர் (பொது), தஞ்சை மின்பகிர்மான வட்டம், தஞ்சாவூர்."*

**6.** மேல்முறையீட்டாளர், மன்றம் அவருக்கு சில நிவாரணங்களை அளித்துள்ளதால் அவருடைய மேல்முறையீட்டு மனுவின் மீது நடவடிக்கை எதுவும் தற்சமயம் எடுக்க தேவையில்லை என்று தெரிவித்துள்ளதால் மேல்முறையீட்டு மனு எண்.57/2016 மீது வேறு நடவடிக்கை தேவையில்லை என்று இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. A. ஹபீப் ரஹமான்,
எம். அப்துல் கலாம் ஆஜாத் அவர்களின் பவர் ஏஜெண்ட்,
எண்.90, இரயில்வே ரோடு,
ஆடுதுறை.

2) மேற்பார்வை பொறியாளர்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, வல்லம் ரோடு,
தஞ்சாவூர் – 625 007.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, வல்லம் ரோடு,
தஞ்சாவூர் – 625 007.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.